# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

இப்படி, திட்டமிட்ட செயல்பாடுகளின் விளைவாகதான், நம்முடைய மாணவர்கள் இன்றைக்கு நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கப் போகிறார்கள்.

**சமூக பொருளாதார மாற்றத்திற்கான அடித்தளம்!**

முதன்மை உயர்கல்வி நிறுவனங்கள் என்றால் ஐ.ஐ.டி., என்.ஐ.டி மட்டுமல்ல!

- தேசிய சட்டப் பல்கலைக் கழகங்கள்,
- விண்வெளி ஆராய்ச்சித் துறை என்று அனைத்துத் துறைகளிலும் முதன்மையாக விளங்குகின்ற உயர்கல்வி நிறுவனங்களில் நம்முடைய மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு மாணவர்களின் வேகம் இந்திய நாட்டுடன் நிற்கவில்லை!

14 மாணவர்கள் தைவான், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் உள்ள உலகின் சிறந்த பல்கலைக் கழகங்களில் சேர, முழுமையான ஸ்காலர்ஷிப் பெற்றிருக்கிறார்கள். இந்தியாவின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்ற மாணவர்களுடைய கல்விச் செலவையும், வெளிநாடுகளில் படிக்கச் செல்லும் மாணவர்களின் முதல் பயணச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பள்ளி மாணவர்கள் மிகப் பெரிய கல்வி நிறுவனங்களுக்குப் போவது பெரும் சமூக, பொருளாதார மாற்றத்திற்கான அடித்தளம். இதன் மூலம், அரசுப் பள்ளி மாணவர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்று மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறார்கள்!

**அரசு பள்ளி மாணவர்களுக்கு அரசு துணை நிற்கும்!**

நம்முடைய மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால், அவர்கள் எந்த உயரத்தையும் எட்டிப் பிடிப்பார்கள்! ஏன் விண்வெளியில் கூட நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்கள் தான் இனி ஆட்சி செலுத்துவார்கள்! அவர்களுக்கு என்னுடைய அரசு துணையாக இருக்கும்!

முதன்மை உயர்கல்வி நிறுவனங்களின் துணைவேந்தர்களும் இயக்குநர்களும், முதல்வர்களும் இங்கே வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு வேண்டுகோள்....

இந்த மாணவ, மாணவியர் ஏதோ தனி நபர்களாக உங்கள் நிறுவனத்தில் சேரவில்லை! தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகளாகத்தான் சேருவார்கள். எங்களுடைய பிள்ளைகளின் பின்னால், இந்த அரசு எப்போதும் துணையாக நிற்கும்.

அவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தையும், உதவிகளையும் நீங்கள் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாணவர்கள் உயர் கல்வி கற்கச் செல்லும் தைவான் மற்றும் மலேசியா நாட்டு தூதரக அதிகாரிகளும் இங்கே வந்திருக்கிறார்கள்.

My dear officials from Taiwan and Malaysia! Take care of our students like your own children, and provide them all necessary support.

**படிப்பில் மட்டுமே கவனம் செலுத்துங்கள்!**

இன்னும் சில நாட்களில் உயர் கல்வி நிறுவனங்களுக்கு செல்லவுள்ள என் அன்பான மாணவக் கண்மணிகளே! இந்த இடத்திற்கு நீங்கள் சாதாரணமாக வந்துவிடவில்லை. எத்தனையோ தடைகளைத் தாண்டித்தான் வந்திருப்பீர்கள். இனியும் தடைகள் வரலாம். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

தன்னம்பிக்கை உள்ளவர்களாக உங்களை நீங்கள் வளர்த்துக் கொள்ளுங்கள்! அறிவாற்றல் இருந்தால் எந்தத் தடையையும் வெல்லலாம்.

படிக்கின்ற காலத்தில் வேறு எதிலும் கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்! உங்களை நம்பித்தான் உங்கள் பெற்றோரும், இந்தச் சமூகமும் இருக்கிறார்கள்.

எங்கள் கனவுகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாடு பெருமைப்பட, இந்திய நாடு பெருமைப்பட நீங்கள் உயர வேண்டும் என்று தமிழ்நாட்டு முதலமைச்சராக மட்டுமில்லை, உங்கள் குடும்பத்தில் ஒருவராக, அன்புடன் கேட்டு, விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## இந்தியத் தாயே!

# எல்லோர் மனதிலும் ஆட்சிசெய்!

(கணையாழி தலையங்கம்)

ஆகஸ்ட் 15
இந்திய விடுதலைக்குப்
பிறந்தநாள்!
கூடவே
மாநில முதல்வர்கள்
கோட்டையில் கொடியேற்றும்
உரிமைக்கும் உரிய நாள்!

மாநில முதல்வர்களுக்கு
உரிமையைப் பெற்றுத் தந்தது
தமிழ்நாடு!
பெற்றுத் தந்தவர்
முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

ஆகவே
விடுதலை நாளில்
மாநில முதல்வர்கள் ஏற்றும்
தேசியக் கொடியில்
தமிழின் பெருமிதம்!
அவ்வகையில்
தமிழ்நாடு முதல்வர்
ஏற்றும் தேசியக் கொடியில்
இரட்டைப் பெருமிதம்!

இந்தியா
விடுதலை அடைவதற்கும் முன்பாகவே
'ஜன கண மன..' எனும்
தாகூரின் நாட்டுப் பாடல்
வங்காளத்தில் பிறந்திருக்கிறது.

ஆம்!
1911 டிசம்பர் 27 இல்
கொல்கத்தா மாநகரில்
காங்கிரஸ் மாநாட்டில்
தாகூரின் உறவினர் சரளா தேவி
பாடியிருக்கிறார்!

'ஜன கண மன'
1950 ஜனவரி 24 இல்
அறிவிக்கப்பட்டிருக்கிறது
தேசிய கீதமாக!

விடுதலை நாள்
குடியரசு நாள் மட்டுமின்றி
அரசு நிகழ்ச்சிகளிலும்
மக்கள் மன்றங்களிலும்
பாடிக் கொண்டாடப்படுகிறது
'ஜன கண மன!'

இந்தியத் தாயே!
மக்களின் இன்ப துன்பங்களைக்
கணிக்கின்ற நீயே
எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செய்கிறாய்!
நின் திருப்பெயர்
பஞ்சாபையும், சிந்துவையும்,
கூர்ச்சரத்தையும் மராட்டியத்தையும்,
திராவிடத்தையும், ஒரிசாவையும்.
வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.
நின் திருப்பெயர்
விந்திய, இமய மலைத் தொடர்களில்
எதிரொலிக்கிறது!
யமுனை, கங்கை ஆறுகளின்
இன்னொலியில் ஒன்றுகிறது!
இந்தியக் கடலலைகளால்
வணங்கப்படுகிறது.
அவை
நின்னருளை வேண்டுகின்றன
நின் புகழைப் பரப்புகின்றன.
இந்தியாவின்
இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற
தாயே!
உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!
இது 'ஜன கண மன' வின் தமிழாக்கம்.
மொழி, இனம், நிலம் கடந்து
இந்தியா முழுவதற்குமான
சம நீதியும் சமூக நீதியுமாகத்
தேசிய கீதம் !

ஆனால் அண்மையில் வந்த
ஒன்றிய அரசின் வரவு செலவில்
மாநிலங்களுக்கு இடையே
ஓரவஞ்சனை!

நியாயமான காரணம் இன்றியே
நிதியையும் சமூக நீதியையும்
ஒதுக்குகிறார்கள்!
ஒதுக்குவதில்
வெளிப்பட வேண்டும் மனித நேயம்!

அறிவின் சாமார்த்தியம்
பிரித்துப் பிரித்து
வேற்றுமை வளர்ப்பதில் இல்லை!

சேர்த்துச் சேர்ந்து
வளர நினைப்பதில்
வெளிப்பட வேண்டும்
அறிவின் மேதைமை!

உலக நாடுகளோடு போட்டியிட்டு
வல்லரசாக விரும்பும் நாட்டிற்கு
உள் நாட்டில்
விருப்பு வெறுப்பு முடிவுகள்
வேருக்கு நீர் ஆகாது!

ஒருபால் கோடாமை
சான்றோர்க்கு மட்டுமில்லை
ஆள்வோருக்கும் வேண்டிய தகுதி!

ஆதரவுக்கு ஒரு நீதி என்றால்
சமத்துவம் இன்மையும்
நியாயமற்ற தன்மையும்
நம்பிக்கையைக் கெடுக்கும்.
குறுகிய கால ஆதாயங்கள்
நீண்ட காலத்தைச் சேதாரம் ஆக்கும்!

சமரசத் தவறுகளுக்கு
முன்னுதாரணம் தேடுதல்
மனக் கசப்புக்குப் பாதை போடும்!

திரு.வி.க. சொல்கிறார்
திராவிடர் என்றால்
ஓட்டுகிறவர் என்றும் பொருளாம்.
தன்னலப் பேயை ஓட்டுகிறவர்!
நீதி ஒதுக்குவதில்
நீதி இல்லையெனச்
சமூக நீதிக்குப் போராடும் போதே
தமிழ்நாட்டு முதல்வரைச் சம நிதிக்கும்
போராட வைத்துள்ளார்கள்!

இந்தியத் தாயே!
மக்களின் இன்ப துன்பங்களைக்
கணிக்கின்ற நீயே!
போதிய நிதி ஒதுக்கீடு
இல்லையென்ற போதும்
பேரிடரில் சிக்கிய வயநாடு மீண்டெழ
முதல் உதவியாக
முதலில் நிதி வழங்கி
முன்னெடுப்பாக நிற்கும்
தமிழ்நாட்டு முதல்வரின்
மானுட நேயப் பண்பை
எல்லோர் மனதிலும்
ஆட்சி செய்!



அன்புடன்
**ம.ரா**

நன்றி : **கணையாழி**
**ஆகஸ்டு 2024**

## முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாள்

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# ஆகஸ்ட் 7 - அன்று அமைதிப் பேரணி!

மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு - மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



தகைமைசால் தலைவராக - எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக - திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கியவாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாடு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர், அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", ஆகஸ்ட் - 7, புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதில், தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் - முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நாள்: 02.08.2024.** **சென்னை மாவட்ட தி.மு.க.,**

## இலங்கைக் கடற்படையின் படகு மோதி விபத்து!

# காயமடைந்த மீனவர்களை தமிழ்நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை!

### ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சரை வலியுறுத்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக. 3 -**

**இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த மீனவரின் உடலை உடனடியாக தாயகம் கொண்டு வரவும், காயமடைந்த மீனவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கி, அவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வர உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தி லிருந்து விசைப் படகில் சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித் துக் கொண்டிருந்தபோது, அங்குவந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அதிர்ச்சியும் ஆழ்ந்த இரங்கலையும் முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தார். அத்துடன் உயிரிழந்த மீனவர் மலைச்சாமி அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், உயிரிழந்த மீனவர் மலைச்சாமி அவர்களது உடலை உடனடியாக தாயகம் கொண்டுவரவும், காயமடைந்த மீனவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கி, அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வர உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், கடந்த 31-7-2024 அன்று, IND-TN-10-MM-73 என்ற பதிவெண் கொண்ட இந்திய மீன்பிடிப்படகின் மீது இலங்கைக் கடற்படையினரின் ரோந்து படகு மோதிய துயர சம்பவம் குறித்து தனது ஆழ்ந்த கவலையையும், வேதனையையும் வெளிப்படுத்தியுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்துயர சம்பவத்தில் ஒரு மீனவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர் என்றும், ஒரு மீனவரை காணவில்லை என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

**இதயத்தை நொறுக்குகிறது!**

இதுபோன்ற நிகழ்வுகளில் இந்திய மீனவர்கள் உயிரிழப்பது இதயத்தை நொறுக்குவதாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இச்சம்பவம் மீனவ சமூகத்தினரை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தை இலங்கை அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்துயர சம்பவத்தில் உயிரிழந்த மீனவர் மலைச்சாமியின் உடலை இந்தியாவுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், இரண்டு மீனவர்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இலங்கை அதிகாரிகளின் வசம் இந்த இரண்டு மீனவர்களும் உள்ளதாகவும், அவர்களுக்குத் தேவையான தூதரக உதவிகளை வழங்கிடவும், போதிய மருத்துவ வசதிகளையும் வழங்கிடவும் கேட்டுக் கொண்டுள்ளதோடு, அவர்களை மிக விரைவில் தமிழ்நாட்டிற்கு அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நமது பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி மேற்கொள்ளும் இதுபோன்ற அத்துமீறல்கள், மீனவ சமூகத்தினரிடையே அச்சத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம், தமிழ்நாட்டின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக் வளைகுடா பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்கும் வகையில் உள்ளதாகவும், இதனை கடந்த காலங்களில் பலமுறை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த விஷயத்திற்கு அதிகபட்ச முன்னுரிமை அளித்து, தூதரக நடவடிக்கையின் மூலம் உரிய தீர்வு காணப்படும் என தான் நம்புவதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.